IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 212 /2012
Deposition of witness for PW1

Name : ராஜா

Father's Name : முருகேசன்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 3 day of January, 2020.

Cross Examination

எனது பிறந்த தேதி எனக்கு தெரியாது. வழக்க தாக்கல் செய்வதற்கு முன்பு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எனது சகோதரி மஞ்சளா திருமணமானவரா, அவரின் கணவர் பெயர் மற்றும் அவரின் தகப்பனார் பெயர் போன்ற விவரங்கள் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ14 குடும்ப அட்டை ஆவணத்தில் குடும்ப தலைவரின் புகைப்படமாக எனது புகைப்படம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி என்ன பதில் போட்டுள்ளார் என்று எனக்கு தெரியும். வா.சா.ஆ8 ஆவணத்தில் என்புகைப்படந்தான் இடம்பெற்றுள்ளது என்றும், குடும்பத்தலைவர் என்ற இடத்தில் என்பெயர் தான் இடம் பெற்றுள்ளது என்றும் சொன்னால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் முருகேசனின் தாயார் முத்தியாலு அம்மாள் சுயார்ஜிதமாக கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான். அதற்கான ஆவணம் தான் என்னிடம் காட்டப்படும் 9.1.1943ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிடப்பட்ட நகல் என்றால் சரிதான் அது பி.வா.சா.ஆ1 ஆகும். முத்தியாலு அம்மாளுக்கு முருகேசன் மட்டும் ஒரே மகன் என்றால் சரிதான். வேறு வாரிசுகள் இல்லை. என்னிடம் காட்டப்படும் பட்டா பாஸ்புத்தகம் முருகேசன் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா பாஸ்புத்தகம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ2 ஆகும். பட்டா பாஸ்புத்தகத்தின் முருகேசன் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உயரில் ஆவணம் தான் 1ம் பிரதிவாதியை கார்டியனாகவும், 2ம் பிரதிவாதியை பயனாளியாகவும் கண்டு எழுதப்பட்ட உயில் ஆவணத்தின் அசல் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ3 ஆகும். உயில்

ஆவணத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் காலஞ்சென்றமுருகேசன் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். 12.1.2011 அன்று முருகேசன் இறந்துவிட்டார் என்றால் அவர் இறந்துவிட்டார் என்ற விவரம் தெரியும் ஆனால் அந்த தேதியில் தான் இறந்தரா என்று எனக்கு தெரியாது. சேவூர் கிராமத்தில் முருகேசன் இறந்தார் என்ற விவரம் தெரியும். சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் எடப்பாளையம் என்ற ஊரில் உள்ளது. முருகேசனுக்கு நானும், 1ம் வாதியும் வாரிசுகள் என்பதற்கு வாரிசு சான்றிதழ் எதுவும் வாங்கவில்லை. அரசாங்கத்தில் சுலோச்சனா மற்றும் மூர்த்தியும் தான் இறந்துபோன முருகேசனின் வாரிசுகள் என்று சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது தாயார் இறந்துபோனதாக சொல்லியுள்ளேன் அதற்கான சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மூர்த்தியும், சூரியாவும் பதில் அனுப்பினார்கள் என்றால் சரிதான். அதில் என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியாது. மூர்த்தி சூரியாவின் பாதுகாவலர் என்ற முறையில் நான் பிரச்சனை செய்ததால் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண். 211/2012 என்ற வழக்கை சூரியாவிற்காக அவரது தாயாரும், மூர்த்தியும் தாக்கல் செய்தார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ6 அறிவிப்பில் மேற்படி முருகேசன் எழுதி வைத்த 31.3.2010ம் தேதியிட்ட உயில் ஆவணத்தை ரத்து செய்யக்கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றும், ஆனால் இவ்வழக்கை உயில் ஆவணத்தை இல்லாநிலையது என விளம்புகை செய்யக்கேட்டு பரிகாரம் கோரியுள்ளேன் என்றும் சொன்னால் சரிதான். எனவே, நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின்படி இவ்வழக்கை தாக்கல் செய்ய வழக்குமூலம் சரியானது இல்லை என்றும், எனவே அதனடிப்படையில் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரிதான். சாட்சி தற்பொழுது உயில் பத்திரத்தை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறுகிறார். தாவா சொத்து முத்தியாலு அம்மாளின் சுயார்ஜித சொத்து என்றால் சரிதான். அவர் இறக்கும் வரை எந்த ஒரு விருப்புரிமை ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றும், அதனடிப்படையில் முருகேசன் வாரிசுரிமைபடி அந்த சொத்து வந்துவிட்டது என்றும், அவரது விருப்பப்படி வா.சா.ஆ3 ஆவணம் எழுதி

வைக்கப்பட்டது என்றும், அந்த ஆவணத்தை செல்லத்தக்கதில்லை என நான் கோரமுடியாது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா பத்தி 6-ல் முருகேசன் தான் தன்னிச்சையாக உயில் எழுதி வைத்துள்ளார் என்று வாதுரைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எந்த தேதியில் 2010 ம் ஆண்டு எழுதி வைத்த உயில் தெரியவந்தது என்று எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும் மற்றும் தாவாவிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நான் அனுபவம் செய்துவருவதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எத்தனை சர்வே எண்ணில் தாவா சொத்து உள்ளது என்றும் எவ்வளவு விஸ்தீரணத்தில் உள்ளது என்றும் அதன் சக்குபந்தி விவரங்கள் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1ஏக்கருக்கு கொஞ்சம் கம்மியாக உள்ளது. சரியான அளவுகள் எனக்கு தெரியாது. பொதுவாக வேலூர் மாவட்டத்தில் இந்து சமயத்தைச்சார்ந்த திருமண பத்திரிக்கையில் மணமகளின் மற்றும் மணமகனின் தாத்தா பாட்டி மற்றும் பெற்றோர்களின் பெயர்கள் போடுவது வழக்கம் என்றால் அதுப்பற்றி தெரியவில்லை. வா.சா.ஆ9 ஆவணத்தில் தாத்தா பாட்டி மற்றும் பெற்றோர்களின் பெயர்கள் இடம்பெறவில்லை என்றும் எனது தாயார் பெயர் இடம்பெறவில்லை என்றால் சாட்சி தனக்கு எழுத, படிக்கத்தெரியாது என்றும், பத்திரிகையை எனது தகப்பனார் அச்சடித்தார் என்றும் கூறுகிறார். வா.சா.ஆ9 பத்திரிகையில் 1ம் வாதியினுடைய பெயர் இல்லை என்றும், நான் இந்த வழக்கிற்காக தயார் செய்த ஆவணம் என்றால் சரிதான். எனவே என்னை இந்த ஆவணத்தின் அடிப்படையில் முருகேசனின் வாரிசு என்று ஏற்றுக்கொள்ளமுடியாது என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.